## முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**23.02.2026**

OS. No. 235/2012

பக்கம் – 3

DW1 – ஜெயந்தி

**வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாவா சொத்தினை கிரயம் பெற்றபொழுது ஒன்று மட்டும் இரண்டு வாதிகள் இளவர்கள் என்னால் சரிதான். வாதிகள் 1 மற்றம் 2ன் பிறந்த, தேதி, மாதம் வருடம் எனக்கு தெரியாது. முதல்வாதி 12.10.1989 அன்று பிறந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதுபோல் இரண்டாம் வாதி 25.11.1993 பிறந்தார் என்றால் அந்த விபரமும் எனக்கு தெரியாது. இந்த வழக்கை வாதிகள் தாக்கல் செய்த போது அவர்கள் அவர்களுடைய வயது என்ன என்று விவரம் எனக்கு தெரியாது. வாதிகள் இருவரும் அவர்கள் மேஜர் ஆன மூன்று வருட காலத்திற்குள் இந்த வழக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு 06.11.2012 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு சரியாக தெரியவில்லை. வாதிகள் இருவரும் அவர்களுடைய 18 வயது பூர்த்தி அடைந்து மூன்று வருட காலத்திற்குள் தான் அதாவது 06.11.2012 இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்ட காரணத்தினால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது என்றும் நான் கோரியபடி தள்ளுபடி செய்யப்பட வேண்டியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணப்படி 27 4 1996 ஆண்டு சங்கர் ராமன் என்பவரிடமிருந்து வாதிகள் தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 1996 ஆம் ஆண்டு முதல் வாதியின் வயது 06 என்றால் அது குறித்து எனக்கு தெரியாது .1996 ஆம் ஆண்டு 2ம் வாதியின் வயது 3 என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாதிகள் இளவர் என்ற அடிப்படையில் அவருடைய பெற்றோர் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை 1996 ஆம் ஆண்டு அவர்களுக்காக வேண்டி இவர்கள் கிரயம் பெற்றுள்ளனர் என்றால் சரியல்ல. அதன் காரணமாக தாவா சொத்து மைனர்கள் சொத்து என்றால் சரியல்ல. ஒன்னு மட்டும் இரண்டு பிரதிவாதிகள் மூன்றாம் பிரதிவாரியான வெங்கடேசன் எனக்கு தாவா சொத்துக்

குறித்து ஒரு பொது அதிகார பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர். வா.சா.ஆ.5 31.07.2006 அன்று மூன்றாம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பொது அதிகாரம் பத்திரம் ஆகும். வா.சா.ஆ.5 ஆவணப்படி ஒன்று மற்றும் இரண்டு பிரதிவாதிகள் மூன்றாம் பிரதிவாதியிடம் இருந்து எந்தவித பிரதிபலனும் இல்லாமல் தான் அந்த ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. அதனால் மூன்றாம் பிரதிவாதி வெங்கடேசன் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பணம் கொடுத்து வா.சா.ஆ.5 பொது அதிகார பத்திரத்தை பெற்றதாக சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல. ஒன்று மட்டும் இரண்டு பிரதிவாதிகள் மூன்றாம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்திக் கொடுத்த வா.சா.ஆ.5 பொது அதிகார பத்திரத்தை வா.சா.ஆ.4 ரத்து பத்திரம் மூலம் ரத்து செய்துவிட்டார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தி கொடுத்த காலத்திலும் வாதிகள் இளவர்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 பொது அதிகார பத்திரத்தை வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்தப்பட்டு 8 வருட காலம் கடந்துதான் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது குறித்தும் எனக்கு தெரியாது. அனைத்து விபரங்களும் என்னுடைய கணவருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தை எனது பெயருக்கு மூன்றாம் பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்த போது அவருடைய பெயரில் உள்ள பொது அதிகார பத்திரம் வா.சா.ஆ.4 ரத்து பத்திரம் மூலம் ரத்து செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கு கிரயம் பெற்றேன். மூன்றாம் பிரதிவாதி அந்த கிரியை பணத்தை ஒன்று மட்டும் இரண்டு பிரதிவாதிகளுக்கு கொடுத்தாரா அல்லது போய் சேர்ந்ததா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட போதும் வாதிகள் இளவர்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்து கிரயம் செய்து கொடுப்பதற்கு மூன்றாம் பிரதிவாதியோ அல்லது ஒன்று மட்டும் இரண்டு பிரதிவாதிகளும் மாவட்ட நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற்றுள்ளனரா

என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்து இளவர்கள் சொத்து என்ற காரணத்தினாலும் நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறாமல் என்னுடைய பெயருக்கு வா.சா.ஆ.8 ஆவணம் மூலம் கிரயம் செய்து கொடுத்துள்ள காரணத்தினாலும் வாதிகள் ஆகி மூன்று வருட காலத்திற்குள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள காரணத்தினாலும் அவர்கள் கோரியபடி இந்த வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. இளவர்கள் சொத்தினை பொது அதிகார முகவர் மூன்றாம் பிரதிவாதி வெங்கடேசனுக்கு கிரயம் செய்து கொடுக்க எந்தவித அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்